கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர். சங்கீதம் 6:3

தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்

புனே சேகரம்

ஜூன் - 2021 *செய்தி மலர்* - 8

பெதஸ்தா C.S.I. ஆலயம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவவர்களே,

கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர்* (சங்கீதம் 6:3)

கொரோனா நோயானது முதலாம் அலை, இரண்டாம் அலை, மூன்றாவது அலை என்று போய்க்கொண்டே இருக்கிறது. எதுதுவரைக்கும் தேவனாகிய கர்த்தர் நம்மீது இறங்காது இருப்பார்? எப்பொழுது இந்த சூழ்நிலை மாறும்?

அவசரமான ஒரு வேலைக்காக இரண்டு பேர் வேகவேகமாக நடந்து போய் கொண்டிருந்தனர். திடீரென மழை வந்து விட்டது. இரண்டு பேரும் ஒரு கடையோரம் மழைக்கு ஒதுங்கினார்கள். அவர்களில் ஒருவர் 'என்ன இது, இந்த நேரம் பார்த்து மழை வந்து விட்டதே!' என சலித்து கொண்டார். இன்னொருவரோ 'மழை பெய்வது சகஜமானது. ஆனால் இது எவ்வளவு நேரம் பெய்யப்போகிறதோ தெரியவில்லையே' என்று அங்கலாய்த்து கொண்டார். மனித வாழ்க்கையிலும் துன்பங்களும் கஷ்டங்களும், பிரச்சனைகளும், சகஜமானதே. ஆனால் வந்துவிட்ட கஷ்டங்களும் சோதனைகளும் எவ்வளவு காலம் இப்படியே தொடரப்போகிறது? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் போகும்போது தான் சலிப்பும், பயமும், சோர்வும், நம்பிக்கை இழப்பும், மனத்தளர்வும் ஏற்பட்டு விடுகிறது.

1. கர்த்தர் சொல்லியிருக்கிற கர்ப்பத்தின் கனியை கண்களால் காண இனியும் எதுவரைக்கும் காத்திருப்பது, என்ற கேள்வி ஆபிரகாமிற்கு நிச்சயம் தோன்றியிருக்கும்.
2. எத்தனை காலம் இந்த அந்நிய நாட்டில் சிறை கைதியாக முடங்கி கிடப்பது என்ற கேள்வி யோசேப்பிற்கு கட்டாயம் ஏற்பட்டிருக்கும்.
3. மனநிலையும் உடல் நிலையும் பாதிக்கப்பட்டு எதுவரைக்கும் வியாகுலப்பட்டு கொண்டிருப்பது என்ற கேள்வி யோபுவிற்கு நிச்சயம் எழுந்திருக்கும்.



ஆனால் எதுவரைக்கும் என்ற கேள்விக்கு இந்த மூன்று பேருமே முடிவை கண்டனர். எதுவும் அப்படியே எந்நாளும் தொடர்ந்து விடப்போவதில்லை. தேவன் மேல் நம்பிக்கை வைத்து அவரை சார்ந்து கொண்டு வாழ்கின்றவர்கள் தங்கள் துன்பங்களுக்கு ஒரு முடிவை காணாமல் போய் விடுவதில்லை. இரவு எத்தனைதான் இருள் நிறைந்ததாக இருந்தாலும் வெளிச்சம் வீசும் பகல் வராமல் போவதில்லை. எதுவரைக்கும் இந்த கொரோனா துன்பம் தொடரபோகிறது? என்ற கேள்விக்கு விடை காண்பது கடினம். ஆனால் தேவன் அவைகளை அறிவார். சில சூழ்நிலைகளில் அந்த கேள்விக்கு விடை காணும் பொறுப்பு நம்மிடமே இருக்கும். அவற்றில் ஒரு சிலவற்றை நாம் காண்போம்.

சில துன்பங்களுக்கு, நோய்களுக்கு, வேறு யாரும் அல்ல, நாம் தான் காரணம். தவறான முடிவுகள், தவறான குணங்கள், தவறான ஆலோசனை, தேவனை சார்ந்து செயல்படாமை போன்றவையும் துன்பங்கள் நீங்காமல் தொடர வழி வகுக்கும். இவைகளை உணர்ந்து திருத்தி கொள்ளவும், தவறுக்காக மனம் வருந்தி ஒப்புரவாகும்போது மட்டுமே துன்பங்கள் நீங்குவுதற்கான சூந்நிலை உருவாகும்.

ஒருவேளை நம்மிடம் போதிய அளவு தாழ்மை இல்லாமமலிருக்கலாம். நம்மிடம் போதியளவு சகிப்புத்தன்மையும், விட்டு கொடுக்கும் பண்பும் இல்லாமமலிருக்கலாம். ஆகவே நம்மை பக்குவப்படுத்தி தேவனுக்கு உகந்த பாத்திரமாக மாற்ற தேவன் துன்பங்களை உபயோகிக்க கூடும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யோபுவை போல 'அவர் என்னை சோதித்த பின் சுத்த பொன்னாக விளங்குவேன்' என்று நாமும் நம்பிக்கையோடு பேச பழகி கொள்வோம்.

அன்பானவர்களே, நீங்கள் தேவனுடைய ஆளுகைக்கு உட்பட்டு அவருடைய வழியில் நடக்கும்போது நம் துன்பங்களை தேவன் தம்முடைய நாமம் மகிமைப்படும் விதமாக பய்னபடுத்துவார் என்பது உண்மை. ஒருவேளை நீங்களும் 'எதுவரைக்கும் இந்த துன்பங்கள்' என்று கேட்பீர்களானால், 'அவருக்கு உகந்தவர்களாகவும், அவரது திட்டத்திற்கு ஏற்றவர்களாகவும் மாறும்வரை என்பதே தேவ சமுகத்தின் பதிலாக இருக்கும். ஆமென்!

Dear beloved in Christ,

"My soul is in deep anguish. How long, LORD, how long?" - Psalm 6:3

The corona pandemic is continually spreading in the form of first, second and third waves. How long will the Lord not relent concerning us? When will this situation change?

There were two men who were walking swiftly to do an urgent job. Suddenly it started to rain. The two men stepped aside to a shop to shelter against the rain. One of them grumbled and said, "What is this? it has started raining at such a time as this?". But the other person said in distress, "it is usual for it to rain, but how long will it last?". In our human lives also, troubles, difficulties, problems are usual but how long will the troubles, difficulties, problems that have come last? When we do not know the answer to these questions, we end up grumbling, become fearful, sorrowful, without hope and distressed.

1. The question, "how long should I wait to see the fruit of the womb which God has promised?" would have surely come to Abraham.

2. The question, "how long should I suffer as a prisoner in foreign soil?" would have surely come to Joseph.

3. The questions, "how long will I be affected in body and mind and live in distress?" would have surely come to Job.

But the three of them definitely got the answer to the question, "how long?". There is nothing that is going to last forever. Those who have hoped in God and put their trust in Him, will definitely see an end to their troubles. No matter how dark the night is, the brightness of the dawn will surely break in. To answer the question, "how long will this corona pandemic last?" is difficult. But God knows the answer to every question. In some circumstances the responsibility to find answer to such questions would lie with us. We will see the answer to a few of those questions in the following paragraphs.

For some troubles, diseases, nobody else but we ourselves would be responsible. Wrong choices, wrong character, wrong counsel, acting independently of God, such things would be the cause of continual trouble in our lives. When we realize, regret and repent over these, only then the troublesome circumstances in our lives would begin to change.

Probably we do not model humility, do not possess the required amount of patience, generosity in our lives. Therefore, to mould us and shape us into the right person we ought to be God may choose to use these troubles. In situations like these let us like Job say, "…when he has tested me, I will come forth as gold."



Beloved in the Lord Jesus Christ, when you surrender to the Lordship of Christ and walk in His ways the Lord will use your trouble and hardship for His glory. It could be that you are asking, "'how long will these troubles last?" "Till we become worthy of Him and become a vessel that will fit His plan", will be the answer from God's presence. Amen!

திருவசன ஊழியம்

MEMORY VERSES 2021

06-06-2021

பரம ஞானம்

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

- யாக்கோபு 1:5

06-06-2021

Wisdom from Above

If any of you is lacking in wisdom, ask God, who gives to all generously and ungrudgingly, and it will be given you. - James 1:5

13-06-2021

படைப்பில் கடவுளின் மகிமை

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.

- சங்கீதம் 19:1

13-06-2021

God's Glory in Creation

The heavens are telling the glory of God; and the firmament proclaims his handiwork.

- Psalm 19:1

20-06-2021

வாணிபத்தில் கிறிஸ்தவ மதிப்பீடு

கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; - உபாகமம் 28:8(மு)

20-06-2021

Christian Values in Business

The LORD will command the blessing upon you in your barns, and in all that you undertake;

- Deuteronomy 28:8(a)

27-06-2021

இழப்பதே சீஷத்துவம்

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. - 2கொரிந்தியர் 4:8,9

27-06-2021

Discipleship Demands sacrifice

We are afflicted in every way, but not crushed; perplexed, but not driven to despair; persecuted, but not forsaken; struck down, but not destroyed; 2Corinthians 4:8,9

அனுதின வேத வாசிப்பு பகுதி

ஜூன்

தேதி	காலை	காலை	மாலை	மாலை
1	2 சாமு 18:1-19:10	நீதி 16:14-15	யோவா 20:1-31	சங் 119:125-176
2	2 சாமு 19:10-20:13	நீதி 16:16-17	யோவா 21:1-25	சங் 120:1-7
3	2 சாமு 20:14-22:20	நீதி 16:18	அப் 1:1-26	சங் 121:1-6
4	2 சாமு 22:21-23:23	நீதி 16:19-20	அப் 2:1-47	சங் 122:1-9
5	2 சாமு 23:24-24:25	நீதி 16:21-23	அப் 3:1-25	சங் 123:1-4
6	I இரா 1:1-53	நீதி 16:24	அப் 4:1-37	சங் 124:1-6
7	I இரா 2:1-3:2	நீதி 16:25	அப் 5:1-42	சங் 125:1-5
8	I இரா 3:3-4:34	நீதி 16:26-27	அப் 6:1-15	சங் 126:1-6
9	I இரா 5:1-6:38	நீதி 16:28-30	அப் 7:1-29	சங் 127:1-6
10	I இரா 7:1-51	நீதி16: 31-33	அப் 7:30-50	சங் 128:1-6
11	I இரா 8:1-66	நீதி 17:1	அப் 7:51-8:13	சங் 129:1-8
12	I இரா 9:1-10:29	நீதி 17:2-3	அப் 8:14-40	சங் 130:1-8
13	I இரா 11:1-12:19	நீதி 17:4-5	அப் 9:1-25	சங் 131:1-3
14	I இரா 12:20-13:34	நீதி 17:6	அப் 9:26-43	சங் 132:1-18
15	I இரா 14:1-15:24	நீதி 17:7-8	அப் 10:1-23	சங் 133:1-3
16	I இரா 15:25-17:24	நீதி 17:9-11	அப் 10:24-48	சங் 134:1-3
17	I இரா 18:1-46	நீதி 17:12-13	அப் 11:1-30	சங் 135:1-21
18	I இரா 19:1-21	நீதி 17:14-15	அப் 12:1-23	சங் 136:1-25
19	I இரா 20:1-21:29	நீதி 17:16	அப் 12:24-13:15	சங் 137:1-9
20	I இரா 22:1-53	நீதி 17:17-18	அப் 13:16-41	சங் 138:1-8
21	2 இரா 1:1-2:25	நீதி 17:19-21	அப் 13:42-14:7	சங் 139:1-24
22	2 இரா 3:1-4:17	நீதி 17:22	அப் 14:8-26	சங் 140:1-13
23	2 இரா 4:18-5:27	நீதி 17:23	அப் 15:1-31	சங் 141:1-10
24	2 இரா 6:1-7:20	நீதி 17:24-25	அப் 15:32-16:15	சங் 142:1-7
25	2 இரா 8:1-9:15	நீதி 17:26	அப் 16:15-40	சங் 143:1-12
26	2 இரா 9:16-10:31	நீதி 17:27-28	அப் 17:1-43	சங் 144:1-15
27	2 இரா 10:32-12:21	நீதி 18:1	அப் 18:1-21	சங் 145:1-21
28	2 இரா 13:1-14:29	நீதி 18:2-3	அப் 18:22-19:12	சங் 146:1-10
29	2 இரா 15:1-16:20	நீதி 18:4-5	அப் 19:13-41	சங் 147:1-20
30	2 இரா 17:1-18:12	நீதி 18:6-7	அப் 20:1-38	சங் 148:1-14

வேதாகமத்தேர்வு - அப்போஸ்தலர்

I. பொருத்துக (Match the following)

ஆறுதலின் மகன் Son of consolation	- இரத்த நிலம் Field of blood
அக்கெல்தமா Aceldama	- தோல் பதனிடுகிறவன் Tanner
பர்னபா Barnabas	- தோற்காள் Dorcas
சீமோன் Simon	- யோசே Joses
தபீத்தாள் Tabitha	- யோசேப்பு Joseph

II. ஓரிரு வார்த்தைகளில் விடையளி (Answer in a word or two)

1. தேவாலயத்தை காக்கிறவர்கள் யார்?
Who guards the church?

2. யாரை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்?
Whom did the Lord bring into the church daily?

3. பவுலின் பேச்சை கேட்க மிகுந்த ஆடம்பரத்துடனே வந்த ராஜா ராணி யார்?
Who were the king and queen who came with great pomp to hear Paul speak?

4. நான் கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்க பண்ணுகிறாய். யார் யாரிடம் கூறியது?
You are persuading me a little while before I become a Christian. Who told this to whom?

5. யூத தாய்க்கும் கிரேக்க தகப்பனுக்கும் பிறந்த மகன் யார்?
Who was the son born to a Jewish mother and a Greek father?

III. விடுகதைகள் (Riddles)

1. கேட்டதை கொடுக்கவில்லை
   தேவையானதை கொடுத்தார்.
   அது என்ன?
   Did not give what was asked
   Gave what was needed.
   what is that?

2. ஏற முடியாத கோட்டை
   கோட்டையை சுற்றி வேட்டை
   வேட்டைக்குள் காக்கப்பட்ட முட்டை
   முட்டைக்குள் தங்க முட்டை.
   அது யார்?

Impossible to climb the fort
Hunting around the fort
Eggs preserved during hunting
Golden egg inside the egg
Who is it?

3. பட்டாளத்து மனிதன்
புத்தியுள்ள மனிதன்
தேடி வந்த மனிதர்களின்
தேவைகளை சந்தித்தவன்.
அவன் யார்?
An Army man
A wise man
Who met the needs of the men who came in search
Who is he?

4. அப்போஸ்தலர் நடபடிகளில் பவுல் எத்தனை மிஷனரி பயணங்கள் மேற்கொள்கிறார்?
How many missionary journeys did Paul travel according to the book of Acts?

5. வீட்டில் vegetable கூட்டு செய்ய பயன்படும் பொருள் என்னுடைய பெயரில் தீவு உள்ளது. நான் யார்?
I am used to make vegetable dishes and I also have an island by my name. Who am I (Tamil name)?

ஏப்ரல் மாதம் வேதாகமத் தேர்வு விடைகள் - யோவான்

1. தன்னை அனுப்பினவருடைய கிரியையை முடிப்பது 4:32,34
2. எருசலேம் தேவாலயப் பிரதிஷ்டைபண்டிகை 10:22
3. பெத்சாயிதா 1:44
4. இயேசு கொடுக்கும் ஜீவ தண்ணீர் 4:10,14
5. நிக்கொதேமு 3:1
6. கபத்தா 19:13
7. கிலெயோப்பா மரியாள் 19:25
8. இருளை 3:19
9. சீகார் 4:5,6
10. நியாயப்பிரமாணம், கிருபையும் சத்தியமும் 1:17
11. அயினோன் 3:23
12. தோற்றத்தின்படி, நீதியின்படி 7:24
13. தன் ஜீவனை 12:25

14. 7

15.

கானாவூர் கல்யாணம் 2:1-12	நானே திராட்சைசெடி 15:1
5000 பேருக்கு போஷித்தல் 6:1-14	நானே ஜீவ அப்பம் 6:35
பெதஸ்தா குளம் 38 வருட வியாதி 5:1-15	நானே வாசல் 10:9
அரசு அலுவலர் மகன் குணமாதல் 4:46-54	நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் 14:6
தண்ணீர் மேல் நடத்தல் 6:14-21	நானே நல்ல மேய்ப்பன் 10:11
பிறவி குருடன் பார்வையடைதல் 9:1-12	நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் 8:12
லாசரு உயிரோடு எழுப்புதல் 11:1-44	நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் 11:25

ஏப்ரல் மாதம் வேதாகம கேள்விகளுக்கு சரியான விடைகள் எழுதினவர்கள்

1. Mr. Bestlin
2. Mrs. Deepa Bestlin
3. Mrs. Prema Samson
4. Mrs. Dharshana Kishan
5. Mrs. Shalini Madhavan

BIRTHDAYS

3 June	Mr. Arul Ruban J
6 June	Mrs. Sharmi Joel
13 June	Mrs. Kavitha
15 June	Mrs. Shalini
26 June	Mr. Giftson Das Wilson
26 June	Mr. Richard Boon P

WEDDING DAY

9 June – Mr. & Mrs. Jefferson T
22 June – Mr. & Mrs. Jerome Lawrence

பிறந்த நாள் மற்றும் திருமண நாளுக்கான வாக்குத்தத்தம்:

நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்.

எரேமியா 1:8

Be not afraid of their faces: for I am with thee to deliver thee, saith the LORD.

Jeremiah 1:8

Notes:

- Deadline for submitting answers to the Bible Quiz: 27 June 2021
- Due to Covid-19 restrictions, church service is conducted online through Zoom every Sunday at 9:00am.
- Zoom prayer service in view of the coronavirus pandemic is conducted every night at 9:30pm.
- Please stay home and stay healthy.

உங்களுக்காக ஜெபிக்கும்
Rev. S. சௌந்திரபாண்டியன்
சேகர குரு
புனே சேகரம்